பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

30 04 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள</u>

1. தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்கும் வகையில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்புப் படைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

2. உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி திரு. பூஷன் ராம்கிருஷ்ண கவாய் நியமிக்கப்பட்டுள்ளார்.

3. தமிழகத்தில் தீண்டாமையை ஒழிக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

4. சென்னை கொளத்தூர் தொகுதியில் சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 14 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<>>>*

தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்கும் வகையில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்புப் படைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்த உயர்நிலைக் கூட்டம் புதுதில்லியில் நேற்று பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், முப்படைகளின் தளபதி திரு. அனில் சௌஹான் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பேசிய பிரதமர், தீவிரவாதத்தை முழுமையாக வேறருக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கை மேற்கொள்வது என்பதை முடிவு செய்ய முப்படைகளுக்கும் பிரதமர் முழு சுதந்திரம் அளித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

*<<<>>>*

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

பஹல்காம் தாக்குதல் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பாகிஸ்தான் பிரதமர் திரு. ஷாபாஸ் ஷெரீஃப் ஆகியோரை தொடர்புகொண்டு பேசிய ஐ.நா. பொதுச்செயலாளர், இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததாக அவரது செய்தித்தொடர்பாளர் திரு. **Stephane Dujarric** தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியா – பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரிப்பது குறித்து கவலை தெரிவித்த திரு. குட்டரெஸ், இரு நாடுகளுக்கிடையே போர் ஏற்பட்டால் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் போரை தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் திரு. **Dujarric** கூறியுள்ளார்.

அத்துடன் போர்ச்சூழலை தவிர்க்க இந்தியா – பாகிஸ்தானுக்கு உதவ தாம் தயாராக இருப்பதாக திரு. குட்டரெஸ் யோசனை தெரிவித்ததாகவும், ஆனால் மூன்றாம் தரப்பின் தலையீட்டை ஏற்க இந்தியா மறுத்துவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<>>>

உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு. பூஷன் ராம்கிருஷ்ண கவாய் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிறப்பித்துள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கண்ணா வரும் 13ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதையடுத்து, நாட்டின் 52வது தலைமை நீதிபதியாக திரு. பி.ஆர். கவாய் வரும் 14ஆம் தேதி பதவியேற்க உள்ளார்.

<<<>>>

தமிழகத்தில் தீண்டாமையை ஒழிக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமையின் குறியீடாகவும் கருதப்படும் 'காலனி' என்ற சொல் ஆவணங்களில் இருந்து நீக்கப்பட்டால் மட்டும் போதுமா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆட்சியிலும், கட்சியிலும் உருவாக்கி வைத்திருக்கும் காலனிகளை நீக்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் வினவியுள்ளார்.

ஏற்கனவே வேங்கைவயல் விவகாரத்தில் இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் நடவடிக்கை எடுக்காத நிலையில் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் பானம்பட்டு கிராமத்திலும் குடிநீர் தொட்டி மீது மனித கழிவு பூசப்பட்டிருப்பதையும் திரு. எல். முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுக ஆட்சியில் பட்டியலின மக்கள் படும் துன்பங்களுக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<>>>

உயிர்காக்கும் அத்தியாவசிய மருந்துப்பொருட்கள், ஏழை, எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் மத்திய அரசு மக்கள் மருந்தகம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

வேலூர் மாவட்டத்தில் செயல்படும் மக்கள் மருந்தகங்களால் தங்களது மருத்துவச் செலவு பெருமளவு குறைந்துள்ளதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

சென்னை கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்து 40 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

இத்தொகுதிக்குட்பட்ட ஜமாலியா லேன் பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கிய அவர், பெரியார் அரசு மருத்துவமனை பயன்பாட்டிற்கான 3 வாகனங்களின் சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.

ஜி.கே.எம். காலனியில் அமைக்கப்பட்டுள்ள மாலை நேர சிறப்பு வகுப்பு மையமான கல்விச் சோலையையும் அவர் திறந்து வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

சென்னை மாநகராட்சியால் சுமார் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநகராட்சி பள்ளிகளில் விளையாட்டுத் திடல் மேம்பாடு, கிரிக்கெட் பயிற்சிக் கூடம் மற்றும் சாலையோர பூங்கா அமைக்கும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகேயுள்ள கூவாகம் கூத்தாண்டவர் கோவில் சித்திரைத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதில் பங்கேற்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த திருநங்கைகள் கூவாகம் வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்க அதிபராக திரு. டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதன் 100வது நாள் நிறைவு விழா மிச்சிகனில் நடைபெற்றது.

------------

ஸ்பெயின் நாட்டில் மீண்டும் மின்தடை ஏற்படாத வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அந்நாட்டுப் பிரதமர் திரு. **Pedro Sanchez** தெரிவித்துள்ளார்.

------------

மத்திய ஆயுஷ் அமைச்சகம் சார்பில் தேசிய ஆயுஷ் இயக்க இரண்டு நாள் மாநாடு மகாராஷ்டிர மாநிலம் லோனாவாலாவில் நாளை தொடங்குகிறது.

------------

மகாராஷ்டிராவில் அரசால் நடத்தப்படும் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் தங்கியுள்ள ஆதரவற்றோருக்கான மாதாந்திர உதவித்தொகையை ஆயிரத்து 200 ரூபாயாக உயர்த்தி அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

------------

தருமபுரி ஔவையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் வாரவிழாவை ஆட்சியர் திரு. சதீஷ் தொடங்கி வைத்து, பேச்சு மற்றும் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்.

------------

திருவாரூர் வட்டத்திற்குட்பட்ட மணக்கால் பகுதியில் மக்கள் நேர்காணல் முகாம் இன்று காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ளது.

------------

சித்திரை கார்த்திகையை முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தில் முருகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

------------

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே உள்ள புதுப்பாடி பகுதியில் காவல்துறையினர் மேற்கொண்ட வாகன சோதனையில் 60 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இதனைக் கடத்திச் சென்ற ஆந்திராவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

------------

பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் சென்னை கடற்கரை – செங்கல்பட்டு இடையிலான குளிர்சாதன வசதி கொண்ட மின்சார ரயில் சேவையின் நேரத்தை தெற்கு ரயில்வே மாற்றியமைத்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 14 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 204 ரன் எடுத்தது.

205 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி, 190 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்றைய போட்டியில் சென்னை அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி சென்னையில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-----------

அடுத்த ஆண்டு ஜப்பானில் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் தொடர்ந்து இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலப்பு தற்காப்புக் கலை போட்டிகளும் புதிதாக ஆசிய விளையாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

**<<<<The End>>>>**